650

சிறுவர்க்கேற்ற

சிறுகதைகள்



0-,3x
N49
120397

...ந்தியப் பதிப்புக் கழகம்
...ாக்கம், சென்னை-24

சிறுவர்க்கேற்ற சிறுகதைகள்

ஆசிரியர்
ஜான் துரைராஜ், பி.ஏ., எல்.டி.,
தலைமை ஆசிரியர், ஏ. பி. எம், உயர்தரகலாசாலை
சோளிங்கபுரம்.

தென்னிந்தியப் பதிப்புக் கழகம்
கோடம்பாக்கம் சென்னை - 24.

பதிப்புரிமை] [விலை 5 அணா

முதற்பதிப்பு நவம்பர் 1949.

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, மதராஸ்-1.

முன்னுரை

ஆரம்பப்பள்ளி மாணவர்கள் கதைகளைக் கேட்பதில் பிரியமுள்ளவர்கள். அத்தகைய இளஞ் சிறுர்கள் தாங்களே எளிதில் படித்தறிந்து கொள்ளு மாறு சிலகதைகள் இச்சிறு நூலில் எழுதப்பட்டுள்ளன. சிறுவர்களுக்காகவே இத்தகைய எளிய சொற்களால் அமைந்துள்ளன.

இக்கதைகள் வாயிலாகச் சில அறிய உண்மை களையும் அவர்கள் அறியலாம். இச்சிறுநூலை ஆசிரியர் களும் மற்றவர்களும் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன். இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுதவிய தென்னிந்தியப் பதிப்புக் கழகத்தாருக்கு எம் நன்றி உறித்தாகுக.

ஆக்கியோன்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	சிறந்த புத்திரன் யார்?	—	1
2.	வீரன் ஜெரான்ட்	—	9
3.	விவேகத்தினுல் கிடைத்த வெற்றி	—	17
4.	தாதியின் தியாகம்	—	26
5.	விவேகமுள்ள மந்திரி	—	31
6.	கீழ்ப்படிதலுள்ள மகன்	—	37

1. சிறந்த புத்திரன் யார்?

ஒரு அரசன் தன் நாட்டை மிகவும் கீர்த்தியுடன் ஆண்டு வந்தான். அவனுக்கு மூன்று புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் நன்ருய் வளர்ந்து பலசாலிகளாக யிருப்பது அரசனுக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்தது. என்ருலும் தனக்குப்பின் திறமையுடன் இராஜ்ய பரிபாலனத்தை நடத்தக்கூடிய மகன் யார் என்று அவனுல் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு நாள் அரசன் தன் மூன்று குமாரர்களையும் கூப்பிட்டு, "எனது அருமைப் புத்திரர்களே! எனக்கோ வயோதிகத்தன்மை வந்து விட்டது. எனக்குப்பின் சிம்மாசனத்தில் அமரத் தகுதியுள்ளவன் எவன் என்று என்னுல் இலகுவில் கண்டுகொள்ள முடியவில்லை. உங்களில் யார் என்மேல் அதிக அன்புள்ளவர்களா யிருக்கிறீர்கள்; அதை முதலில் சொல்லுங்கள்" என்ருன்.

முதல் மகன் தகப்பனைப் பார்த்து, "அப்பா நான் உங்கள் மேல் கொண்ட அன்

பின் அளவு, சமுத்திரத்தைக் காட்டிலும் அகலமாயும், ஆழமாயும், எல்லையற்றதாயும்



இருக்கிறது. அதை என்னல் விவரிக்கவே முடியாது" என்ருன்.

அடுத்த மகன் அவனைப் பார்த்து "ஐயனே, யான் தங்கள்பால் கொண்டுள்ள அன்பின் தன்மையை, பூவுலகத்திலும், மேலுலகத்திலும் கூட யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது" என்றான்.

கடைசி குமாரனின் வார்த்தைகளோ இரத்தினச் சுருக்கமாயிருந்தன. "ஐயா! தங்களை நான் மிகவும் நன்றாய் நேசிக்கிறேன். இதைவிட அதிகமாய் என்னால் சொல்ல முடியாது" என்றான்.

பின்பு அரசன் அவர்களை அனுப்பி விட்டான். யோசனையில் ஆழ்ந்தான். தனது மந்திரியைக் கூப்பிட்டு பின்வருமாறு கூறினான்:- "நான் மக்காவுக்கு யாத்திரை செல்ல விரும்புகிறேன். எனது பாவங்களை என்னால் சுமக்க முடியவில்லை; பிரயாச்சித்தம் செய்வதற்காகக் காலில் பாதரக்ஷை இல்லாமலும், தலையில் தலைப்பாகை அணியாமலும், அப்புண்ணிய தலத்திற்குத் தனியாகவே நடந்து செல்ல தீர்மானித்திருக்கிறேன். ஒருக்கால், ஆண்டவனின் திருப்பாதம் அடையும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமானால், எனக்குப் பதிலாக என் குமாரர்கள் மூன்று பேரையுமே அரசா

ளும்படிச் செய்ய வேண்டியது உன்னுடைய கடமை", என்று மிகவும் பயபக்தியாய்ச் சொன்னன்.

மந்திரி தரை மட்டும் தாழக் குனிந்து "ஆண்டவனே! உம்முடைய கட்டளைப் படியே நான் செய்வேன்" என்று வாக்குறுதி கொடுத்தான்.

ஒரு வருஷம் சென்றது.

அறுவடைக் காலம். எல்லோரும் வெகு சுறு சுறுப்பாய் இருந்தார்கள். அச்சமயத்தில் தான் அரசன் இறந்து போனன் என்ற செய்தி எங்கும் பரவிற்று. இராஜ்யம் முழுமையும் துக்க சாகரத்தில் மூழ்கிற்று. எத்திசையில் பார்த்தாலும் ஜனங்கள் அரசனைத் துதித்தார்கள். அரசன் முன்பு மந்திரிக்குக் கொடுத்து விட்டுப் போன கட்டளையின் படியே, அவனுடைய குமாரர்கள் மூவரும் சிம்மாசனம் ஏறினர்கள்.

இன்னொரு வருஷமும் தோன்றி, மறைந்தது. அறுவடைக் காலமாதலால் மக்களுக்கு அலுவல்கள் அதிகமாயிருந்தன. கோட்டை வாசலிலிருந்து ஒரு பிச்சைக்காரன், பட்ட

ணத்துக்குள்ளே மெதுவாக நடந்து வந்தான்.

வழியிலே, மிகவும் துக்கத்தோடே உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு ஆள் அடிக்கடித் தன் மார்பிலே அடித்துக் கொண்டு "என்ன அருமையாக நான் அவரை நேசித்து வந்தேன். அவர் போய் விட்டாரே" என்று புலம்பின வண்ணமாக இருந்தான். அவனைக் கண்டவுடன், அப்பிச்சைகாரனுக்கு அதிகப் பரிதாபம் உண்டாயிற்று. பக்கத்தில் போய், "அப்பா! நீ ஏன் விசனத்தில் ஆழ்ந்திருக்கிறாய்? காரணத்தைச் சொல்ல மாட்டாயா?" என்றான்.

அம்மனிதனே, "எனக்கு இருக்கும் துயரத்தை யாரிடம் சொல்லி ஆறுதல் அடைவேன்? என் தகப்பன்தான் இந்த இராஜ்யத்தை ஆண்டு வந்தார். அவர் இறந்து போனார். இதைக் காட்டிலுமா ஒரு பெரிய நஷ்டம் ஒரு மகனுக்கு நேரிட முடியும்" என்று சொல்லிக் கொண்டே மளமளவென்று அழ ஆரம்பித்தான். தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அலறவும் ஆரம்பித்து விட்டான்.

"அப்பா! அப்படிப்பட்ட அன்பு மிகவும் அபூர்வம்தான். அல்லாதான் உனக்கு ஆறுதல் அளிக்கவேண்டும். அதிருக்கட்டும், உனக்குச் சகோதரர் இருக்கிறார்களா? அவர்களும் இப்படித்தான் உன்னைப் போல் விசனப்பட்டுக் கொண்டு இருக்கிறார்களா?" என்று அப்பிச்சைக்காரன் விசாரித்தான்.

"எனக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். ஒருவனுக்கு விசனமே கிடையாது. நன்றாய் உண்டு, வெறி கொண்டு திரிகிறான். கஜானாப் பணத்தை எடுத்து, களியாட்டங்களில் செலவழித்து வருகிறான். குதிரைப் பந்தயம் என்றால் அவனுக்கு வெகு விருப்பம் பணத்தை வீணாகச் செலவு செய்து சுகபோகமாய் ஜீவித்து வருகிறான்" என்று பதிலளித்தான்.

"கடைசி சகோதரன் எப்படி?" என்று வினவினான் அப்பிச்சைக்காரன்.

"அவன்தான் இப்பொழுது இராஜ்ய பாரத்தைத் தாங்கி வருகிறான். அவனொருவன் இல்லா விட்டால், இந்நேரம் நாடே சீர்குலைந்து போயிருக்கும். என் தகப்பனார் விட்

டுப்போன ஊழியத்தை அவன் தொடர்ச்சி யாய் எடுத்து நடத்துகிருன். அவர் உயிரு டன் இப்பொழுது இருந்தால், என்ன காரி யங்களைச் செய்வாரோ அவைகளையே இன் னும் செய்து வருகிருன்" என்று மிகவும் சந் தோஷமாய்ச் சொன்னுன்.

பின்பு, பிச்சைக் காரனும் அவனும் தங் கள் தங்கள் வழியே சென்ருர்கள்.

அரசனின் மூன்ருவது மகன் கொலு மண்டபத்தில் வீற்றிருந்தான். திடீரென அப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். என்ன துணிகரம் அவனுக்கு! அங்கிருந்த எல்லோ ரும் அவனை வெகு கோபத்துடன் நோக்கி ஞர்கள். பிச்சைக்காரனே, தன் மேல் அங்கி யைக் கழற்றி வீசி எறிந்தான். தலைப்பாகை யையும் கீழே தள்ளி விட்டான். என்ன ஆச் சரியம்! அவன்தான் இறந்துபோய் விட்டதா கச் சொல்லப்பட்ட அரசன். தன் தகப்பனை அடையாளம் கண்டு கொண்ட இளைய மகன் சிம்மாசனத்திலிருந்து தாவிக் குதித்துத் தந் தையை தழுவிக் கொண்டான். மந்திரியும் சேனதிபதியும், மற்ற உத்தியோகஸ்தர்களும் அரசன் அடி பணிந்தார்கள்.

இவ்வதிசயத்தைக் கேட்ட பிரஜைகள் அரசனைப் பார்க்கும்படியாக கொலு மண்டபத்தில் வந்து கூடினார்கள். அரசன் அவர்களைப் பார்த்து, "தன் தகப்பனின் ஊழியத்தைத் தொடர்ந்து, பழுதில்லாமல் நடத்தப் பிரயாசப் படுகிறவனே தகப்பனுக்கு உண்மைப் புத்திரனாவான். எனவே, என் இளைய குமாரனே அரசுக்குரியவன். இப்பொழுதே எனது இராஜ்யம், அதிகாரம், மகுடம் செங்கோல், சிம்மாசனம் எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்" என்றான். குடிஜனங்கள் அனைவரும் அரசனுடைய செய்கையை மெச்சி, தங்களுடைய புதிய அரசனுக்கு வணக்கம் செய்தார்கள்.

"குறையச் சொல்லி நிறையச் செய்தல்
மெச்சத்தகுந்தது"

கேள்விகள்.

1. "தன்னை அதிகமாக நேசிக்கிற குமாரன் யார்?" என்று கேட்ட அரசனுக்கு அவன் குமாரர்கள் அளித்த பதிலென்ன ?

2. "மக்கா"விற்கு அரசன் எதற்காகப் போவதாகக் கூறினான்.

3. அதன் உண்மை நோக்கமென்ன ?

4. மூத்த குமாரன் பிச்சைச்காரனிடத்தில் கூறிய தென்ன ?

5. அரசாளத் தகுந்த குமாரன் யார்? அதை எப்படி நிரூபித்தான் ?

---

2. வீரன் ஜெரான்ட்

முன்னொரு காலத்தில், "ஆர்தர்" என்ற ஒரு அரசன் இங்கிலாந்து தேசத்தில் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனுடைய பிரஜைகளில் சிலர் அவனிடம் வந்து, "அரசே நேற்று எங்கள் ஊரின் பக்கத்திலிருக்கும் காட்டில் ஒரு விநோதமான மானைக் கண்டோம். பாலைப்போல் வெண்மையாய் இருந்தது அம்மிருகம். இப்படிப்பட்ட மானை நாங்கள் இதுவரை பார்த்ததே யில்லை. இது ஒரு அதிசயப் பிறவி—" என்று இன்னும் வர்ணித்துக் கொண்டே போனார்கள்.

அரசனுக்கு அப்பேர்ப்பட்ட மானை வேட்டையாட வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அடுத்த நாள் காலையில் வேட்

டைக்கு வேண்டிய சகல காரியங்களையும் தயார் பண்ணும்படியாகத் தமது பணியாட்களுக்குக் கட்டளை யிட்டார். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இராணி "கனிபேர்" தானும் கூட வருவதாகச் சொன்னாள்.

காலையில், அரசனும் வேட்டைக்காரர்களும், தகுந்த வேட்டைநாய்களுடன் புறப்பட்டார்கள்! அரசி தூங்கிக் கொண்டிருந்தாள். ஆகையால் ஒருவரும் அவளை எழுப்பத் துணியவில்லை.

சற்று நேரங் கழித்து விழித்த இராணி, மற்றவர்கள் எல்லாம் தன்னை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள் என்று கேள்விப் பட்ட போது அதிகமாய் விசனப்பட்டாள். விரைவில், தக்க உடை உடுத்திக் கொண்டு ஒரு தாதிப் பெண்ணையும், "ஜெரான்ட்" என்ற ஒரு வீரனையும் கூட்டிக் கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டாள். ஆனல் அங்கு தனது புருஷனைக் காணவில்லை.

தூரத்தில் ஒரு குள்ளன் வருவதைக் கண்டார்கள். அவனுக்குப்பின் சற்றுத் தூரத்தில் ஓர் போர்வீரன் ஓர் அழகிய குதிரை

யின்மேல் சவாரி பண்ணிக்கொண்டு வந்தான். தனக்குத் தெரியாத போர்வீரன் அங்கு யார் இருக்க முடியும் என்று ஆச்சரியப்பட்ட இராணி தனது தாதியைப் பார்த்து, "அந்தக் குள்ளனிடத்தில் போய், பின்னுல் வரும் போர்வீரன் யார் என்பதை அறிந்து வா" என்று சொன்னுள்.

தாதி அக்குள்ளனிடம் சென்று மிகவும் வணக்கமாக, "இதோ பின்னுல் வரும் உங்கள் எஜமான் யார்? அவருடைய பெயர், ஊர் இவை யாவை"? என்று வினவினுள். அக்குள்ளனே, "இவையெல்லாம் உன் எஜமானிக்கு எதற்கு? நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்று மிகவும் கர்வமாகப் பதிலளித்தான்.

அப்படியானுல் "இதோ நேராக உன் எஜமானிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்" என்று சொல்லித் தாதி அவனைக் கடந்து போக முயன்ருள். "அவரை நீ நேராகக் கேட்பதற்கு உனக்கு அந்தஸ்து போதாது, வந்த வழியே போ" என்று சொல்லிக் கொண்டே தனது சவுக்கினுல் அவளுக்கு ஒரு அடி கொடுத்தான் குள்ளன்.

இரத்தம் பீறிட்டது. தாதி அழுது கொண்டே வந்து இராணியிடம் முறையிட்டாள்.

ஜெரான்ட், 'நான் போய் அந்தப் போர் வீரனைப் பற்றி விசாரித்து வருகிறேன்' என்ருன். அந்தக் குள்ளனே அவனையும் அவமதித்தான். ஜெரான்டுக்கு அடக்க முடியாத கோபம் பொங்கி எழும்பிற்று. அந்தக் காலத்தின் வழக்கத்தின்படியே அவனைத் தனிப் போரில் வென்று சரியான புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்தான். ஆனல் அவன் கையில் அவனுக்கு வேண்டிய ஆயுதங்கள் இல்லை. எனவே, குள்ளனையும், அப் போர்வீரனையும் பின் தொடர்ந்தான் ஜெரான்ட்.

வெகு நேரத்திற்குப்பின் அவ்விருவரும் ஒரு பட்டணத்திற்குள் பிரவேசித்தார்கள். வீதிகள் எல்லாம் அலங்கரிக்கப் பட்டிருந்தன. ஜனங்கள், ஈட்டிகளையும், கேடயங்களையும் தேய்த்துப் பளபளப்பாக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து அங்கு ஏதோ போட்டி நடக்கப் போவதாக அறிந்து கொண்டான் ஜெரான்ட்.

கடந்த இரண்டு வருஷங்களாக அப்பட்டணத்தில் நடந்த போட்டியில், அந்தக் குள்ளனுடன் இருந்த போர் வீரன் தான் வெற்றி பெற்றிருந்தான். ஆகையால் அவன் தனக்கு நிகர் யாரும் இல்லை என்று மார்தட்டிக் கொண்டிருந்தான். கர்வங் கொண்ட அவனும் அந்தக் குள்ளனும், இராணியையும் அவள் அனுப்பிய ஆட்களையும் அவமதித்தது விளங்குகிறதல்லவா?

ஜெரான்ட் அவனைப் போட்டியில் வெல்ல வேண்டுமானுல், கையில் ஆயுதம் வேண்டுமே! யார் கொடுப்பார்கள்?

கடைசியில் ஜெரான்ட் பட்டணத்திற்கு அப்பால் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு இடிந்த கோட்டையை அடைந்தான். அங்கு ஒரு வயோதிகனும், ஒரு கிழவியும், ஒரு அழகிய பெண்ணுமே இருந்தார்கள்.

முன் காலத்தில் அந்த வயோதிகனே அப்பட்டணத்தை ஆண்டு வந்தான். ஆனுல் தங்கை மகன் அதை அபகரித்துக் கொண்டதால் அவன் இந்தஏழைக் கோலம் புக நேரிட்டது. இவர்களிடமிருந்தே, ஜெரான்ட்

தனக்கு வேண்டிய ஈட்டியையும் கேடயத்தையும் வாங்கிக் கொண்டான்.

அடுத்த நாள் போட்டியில் ஜெரான்டும், போட்டியில் கலந்து கொண்டு, அந்தக் கர்வம் நிறைந்த போர் வீரனை எதிர்த்து சண்டை செய்ய வேண்டியதாயிற்று.

போர் வெகு மும்முரமாக நடந்தது. இருவர் கையிலிருந்த ஈட்டியும் சின்னபின்னமாகப் பறந்தன. பின்பு குதிரையிலிருந்து இறங்கி கைவாளை உபயோகித்துச் சண்டை

செய்தார்கள். ஜெரான்டின் பராக்கிரமம் அன்றுதான் வெளிப்பட்டது. அவனுடைய சாமர்த்தியத்தைக் கண்டு சகலரும் வியந்தார்கள். அடி தாங்க மாட்டாமல் அந்தப் போர்

வீரன் அப்படியே விழுந்தான். அழமாட்டாத குறையாய், "என்னை மன்னிக்க வேண்டும்" என்று கெஞ்சினன்.

அப்போது ஜெரான்ட் அவனைப் பார்த்து "உன் கர்வத்தை அடக்க வேண்டுமென்றே நான் இதைச் செய்தேன். என்னிடத்தில் மன்னிப்புக் கேட்பதால் பிரயோஜனம் இல்லை. நீ எங்களுடைய அரசியை அவமதித்து விட்டாய். ஆகையால் அவர்களிடத்திலேயே நீ மன்னிப்புக் கோரவேண்டும்" என்று சொன்னன். அப்போர் வீரன் மிகவும் பணிவுடன் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டான்.

இது நிற்க, மான் வேட்டையும் வெற்றிகரமாகத்தான் முடிந்தது. மான் கொல்லப் பட்டது. அதன் தலையை யாருக்கு வெற்றியின் அறிகுறியாகக் கொடுப்பதென்று தெரியாமல் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயத்தில்தான் ஜெரான்டும் அப்போர் வீரனும் அங்கு வந்து சேர்ந்தார்கள். போர் வீரன் தன் குதிரையினின்றும், இறங்கித் தாழ்மையுடன் இராணியிடம் சென்று தான் அவளை அவமதித்ததற்காக மன்னிப்

கேட்டான். அவளும் மிகவும் பெருந் தன்மை யாய் அவனை மனப்பூர்வமாக மன்னித்தாள்.

ஜெராண்ட் தான் செய்த எல்லாக் காரி யங்களையும், ஒன்று விடாமல், விவரமாக எடுத்துச் சொன்ன போது அங்குள்ள யாவ ருடைய மெச்சுதலுக்கும், புகழுதலுக்கும் உரியவனானன். மானின் தலை யாருக்குச் சேர வேண்டுமென்ற விஷயமும் முடிவுக்கு வந் தது. எல்லோரும் ஏகோபித்து ஜெரான் டுக்கே அதைக் கொடுத்தார்கள்.

கேள்விகள்.

1. காட்டில் பார்த்த மானின் விசேஷம் என்ன ?

2. குள்ளன் இராணியை நேரில் அவமதித்தானு ?

3. போர்வீரன் எப்படி இராணியை அவமதித்தான் என்று சொல்லலாம்.

4. ஜெரான்டுக்கு ஆயுதங்கள் எங்கே, எப்படிக் கிடைத் தன ?

5. ஜெரான்டுக்கும், போர்வீரனுக்கும் நடந்த சண் டையை விவரி.

6. போர்வீரனின் கர்வம் எப்படி அடங்கிற்று ?

7. மானின் தலையை ஏன் ஜெரான்டுக்குக் கொடுத்தார் கள்?

3. விவேகத்தினுல் கிடைத்த வெற்றி

தலே நகரில் ஒரு பெரிய பந்தய ஓட்டம் நடந்தது. மேடையின் மேல் அரசன் வீற்றிருந்தான். ஒரு வாலிபனும், ஒரு இளம் பெண்ணும் ஆயத்தமாய் நின்று கொண்டிருந்தார்கள். பக்கத்தில் பந்தய உத்தியோகஸ்தர்கள் எக்காளத்துடன் நின்ருர்கள்.

வாலிபன் மெலிந்திருந்தான். அவன் தலேமயிர் சுருண்டு அவனுக்கொரு தனியழகைக் கொடுத்தது. கால்களும் கைகளும் கடைந்து வைத்த சந்தனக் கட்டைகள் போலிருந்தன. முகத்தில் ஜெயம் பெற வேண்டுமென்ற ஒரு உறுதி காணப்பட்டது. பெண்ணின் உடை வெகு அலங்காரமாயிருந்தது. அவளுடைய வதனத்தில் உடனே வெற்றி கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது. கூடிவந்திருந்த ஆயிரக் கணக்கான ஜனங்கள் இவர்கள் இருவரையும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயத்தில்தான் அந்நிய நாட்டிலிருந்து தற்செயலாய் ஒரு வாலிபன் அங்கு

வந்து சேர்ந்தான். நடக்கப்போகும் பந்தயத்தைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. பக்கத்திலிருந்த வயோதிகன் மிலானியன் என்ற அவ்வாலிபனுக்கு அப்பெண்ணைப் பற்றிய எல்லா விவரங்களையும் கீழ்க் கண்டவாறு சொன்னான்.

"அட்லாண்டா என்ற அப்பெண் அவ்வூர் அரசனின் குமாரத்தி. அவள் பிறந்தபோது அரசனுக்கு அவள் மேல் கொஞ்சமும் விருப்பம் இல்லை. காட்டிலே கொண்டுபோய் அக்குழந்தையை விட்டுவிடும்படி கட்டளை யிட்டான். அங்கிருந்த ஒரு கரடி அதை எடுத்துக் கொண்டு போய் தன் குட்டிகளுடன் சேர்த்து வளர்த்து வந்தது. குழந்தையும் வளர்ந்து சிறுமியானாள். ஒரு நாள் வேடுவர் இதைக் கண்டு கரடியைக் கொன்று அப்பெண்ணை அரசனிடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அரசன் உடனே அவளை அடையாளம் கண்டு கொண்டான். என்ன செய்வது! வேண்டா வெறுப்புடன் அவளை வளர்த்து வந்தான். காலில் இறக்கை யிருக்குமோ என்னமோ தெரியவில்லை. ஓட்டத்தில் இவளுக்கு நிகர் இவளே! தன்னை

ஜெயிக்க முடியாதவர்களை, இவளுடைய விருப்பத்தின்படியே அரசன் கொன்று வந்தான். எத்தனை வாலிபர்கள் இப்படிச் செத்துப் போயிருக்கிருர்கள் தெரியுமா?" என்று ஒரு பெரு மூச்சுடன் கதையை முடித்தான் அக்கிழவன்.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே மிலானியனின் முகம் வேறுபட்டது.

அவ்வயோதிகன் அவனைப் பார்த்து, "என்ன அப்பா, நீயும் அவளுடன் போட்டியிட விரும்புகிருயா? அதை விரும்பாதே! அவளுடன் போட்டியிட்ட எவரும் ஜெயித்ததில்லை என்பது உன் மனதில் ஞாபகம் இருக்கட்டும்" என்று எச்சரித்தான். ஆனல் மிலானியனே அவ்வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவில்லை.

எக்காளம் ஊதப்பட்டது. முதலில் சொல்லப்பட்ட வாலிபனும் அட்லாண்டாவும் தாவிப் பாய்ந்து ஓட ஆரம்பித்தார்கள். ஜனங்கள் மௌனமாய் இருவரையும் கவனித்தார்கள். அவ்வாலிபன்தான் அதிவேகமாக ஓடினுன்; அவளை முந்தினுன்! வேடிக்

கைப் பார்க்க வந்தவர்களின் இருதயம் ஒரு வித சந்தோஷத்தினுல் நிரம்பினது. ஆனுல் அடுத்த நிமிஷத்தில் அவள் அவனுடன் வந்து சேர்ந்து, கடைசியில் முந்திவிட்டாள்!

தோற்றுப் போனவன் ஜனங்கள் கண் முன் கத்திமுனேக்கு இரையாக்கப்பட்டான்.

அடுத்த நாளும் பந்தயம் நடந்தது. இந்தத் தடவை மிலானியன் நேராக அரசனிடம் சென்று தான் யாரென்று விளம்பரப்படுத்திக் கொண்டான்.

அவன் யார் தெரியுமா? அவன்தான் பக்கத்து நாட்டு அரசனின் குமாரன். வேட்டைக்காக காட்டுக்குச் சென்றக் கால், வழி தப்பித் தற்செயலாய் அங்குவர நேரிட்டது.

மிலானியன் தான் அடுத்த நாள் பந்தயத்தில் ஈடுபட விரும்புவதாக அரசனிடம் அறிவித்தான்.

அரசனே அவனேப் பார்த்து, "அரசிளங் குமாரனே! உனக்கு இது தகாது. துர்ப்பாக்கியமுள்ள என் மகளுடைய வலேயில் நீ சிக்கிக் கொள்வதைப் பார்க்க நான் சகியேன்.

விரும்பின் என் இராஜ்யத்திலுள்ள அழகிய பெண் ஒருத்தியை நீ விவாகம் பண்ணிக் கொண்டு சுகவாழ்வு நடத்தலாம்.....என்ருலும் கடலோரத்தில் வீற்றிருக்கும் தேவதையை நீதரிசனம்செய். அவளுடைய கருணை உனக்குக் கிட்டுமாஞல் ஒருவேளை அதிர்ஷ்டம் உன்னைச் சேரலாம்" என்ருன்.

அன்று மாலை மிலானியன் கடற்கரைக்குச் சென்ருன். அங்கிருந்த அழகிய கோவிலுக்குள் வீற்றிருந்த தேவதையின் சிலை கண்ணைக் கவரும்படியாக இருந்தது. சாஷ்டாங்கமாய் விழுந்து தனது குறையை விண்ணப்பித்தான். "உமது உதவியை நாடியே நான் இங்கு வந்திருக்கிறேன். அடியேனைத் தள்ளிவிடாதேயும். நாளைக்கு நடக்கும் பந்தய ஓட்டத்தில் இராஜகுமாரத்தியை வெல்லும்படியான சக்தியை எனக்கு நீர் கொடுக்க வேண்டும். இதையே நான் விரும்புகிறேன். உம்முடைய கருணை எனக்கிருந்தால், வெற்றியடைந்தவுடன் நானும் அவளுமாக ஒன்று சேர்ந்து வந்து உமது திருவடியில் வணங்குவோம்" என்ருன்.

சூரியனைக் காட்டிலும் அதிகப் பிரகாசமான ஒரு ஒளி வானத்தில் தோன்றிற்று.

சமுத்திரத்தின் அலைகள் எல்லாம் அதன் வெளிச்சத்தைப் பெற்றுப் பிரகாசித்தன. தேவதையின் கோவிலருகில் அவ்வெளிச்சம் வந்தபோது மன ரம்மியமான ஒரு வாசனை எங்கும் பரவிற்று. வாலிபன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். பேரானந்தம் அடைந்து தரையிலே விழுந்தான் அவன்.

மறுபடியும் கண்ணைத் திறந்தபோது, அவ்வழகிய விக்கிரகம் உயிர் பெற்றுப் பிரகாசிப்பதைக் கண்டான். உதடுகள் அசைந்தன. என்ன வார்த்தைகள் வெளிவருமோ வென்று ஏக்கமுடன் கண்ணோக்கினுன் மிலானியன்.

"மிலானியனே! ஏன் நீ பயப்படுகிறுய்? என்னை நம்புகிறவர்களை நான் ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. உனக்கு ஒரு யுக்தி சொல்லித் தருகிறேன் கவனமாய்க் கேள். என் பாதத்தருகே மூன்று தங்கப் பழங்கள் இருக்கின்றன. தேவலோகத்துப் பொன்னுல் செய்யப்பட்டவை. ஆகையால் அவற்றிற்கு ஒரு மந்திர சக்தி உண்டு. கண்டவர் எவரும் அதை எடுத்துப் பரிசித்து, தங்கள் வசம் வைத்துக் கொள்ள விரும்புவர். விவேக

முள்ள உனக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. இப்பழங்களை எடுத்துக் கொண்டு சமயோசிதமாக உபயோகி" என்று சொன்னாள்.

நன்றி செலுத்தும்படியாக மிலானியன் கண்களை ஏறெடுத்தான். அசையா சிலையே முன் நின்றது. கீழே பார்த்தான். மூன்று தங்கப் பழங்கள் இருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு தனது இருப்பிடம் திரும்பினுன்.

அடுத்த நாள் நடந்த பந்தய ஓட்டத்தில் அரச குமாரத்தியின் பக்கத்தில் மிலானியன் நின்ருன். முகத்தில் வெற்றிக் குறி காணப்பட்டது. ஜெயவீரனுகத் தோற்றமளித்தான். எக்காளம் ஊதப்பட்டது. இருவரும் அதிவேகமாகப் புறப்பட்டார்கள். அட்லாண்டா மிலானியனை முந்தி விட்டாள். ஜனங்கள் இருதயத்தில் சொல்லவொணுத் திகில் குடிகொண்டது. "ஐயோ! இந்த அழகிய வாலிபனும் வாளுக்கிரையாகப் போகிருனே" என்று சிலர் அழ ஆரம்பித்தனர்.

மிலானியனே மடியில் கையை விட்டு ஒரு தங்கப் பழத்தை எடுத்து அதை மெதுவாக அப்பெண்ணின் முன் நழுவ விட்டான்.

அவளுடைய கூரிய கண்களுக்கு அப்பழம் தப்பவில்லை. அதைக் கையில் ஏந்த வேண்டு

மென்று அடக்க முடியாத ஒரு ஆசை அவளை ஆட்கொண்டது. ஓடுகிற ஓட்டத்தில் குனிந்து அப்பழத்தை எடுத்துக் கொண்டாள். இது ஒரு க்ஷணப் பொழுதே யானுலும் மிலானியனுக்கு அதிக லாபகரமாயிருந்தது. முன்னையைவிட கொஞ்சம் அதிகமாக நெருங்கினுன். இதே மாதிரியாக இரண்டாவது மூன்ருவது தங்கப் பழங்களையும் கீழே நழுவ விட்டான். அட்லாண்டா அவைகளைப் பொறுக்கும் நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு, வாயுவேகமாய்ப் பாய்ந்தான் மிலானியன்.

கடைசியில் அவனே வெற்றி பெற்ருன்!

ஜனங்களுக்குண்டான குதூகலத்திற்கு அளவில்லே. அதிகமாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். எல்லோரைக் காட்டிலும் அரசனே அதிகமாக சந்தோஷப்பட்டான்.

அடுத்த நாள் காலேயில், கடலோரத்திலிருந்த தேவதையின் சிலேயின் முன் இருவர் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தார்கள். அவர்கள் வேறு யாருமில்லே; அட்லாண்டாவும், மிலானியனும் தான்!

கேள்விகள்.

1. அட்லாண்டாவின் பாலிய சரித்திரத்தைக் கூறுக.

2. முதல் பந்தயத்தின் முடிவு என்ன?

3. அரசன் மிலானியனுக்குப் பந்தயத்தில் வெற்றிபெற என்ன யுக்தி சொல்லிக் கொடுத்தான் ?

4. கடற்கரைக் கோவில் தேவதையைப் பற்றியும் அவள் மில்ானியனுக்கு என்ன கொடுத்தாள் என்பதைப் பற்றியும் விவரி.

5. அட்லாண்டா ஏன் தோற்ருள் ?

4. தாதியின் தியாகம்

ஜோதிப்பூரை ஆண்டுவந்த ராஜபுத்திர அரசனுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. மிகவும் குதூகலத்துடன் எல்லோரும் அந்த நாளைக் கொண்டாடினார்கள். ஆனால் மூன்று நாட்களுக்குப் பின் நடந்த ஒரு சம்பவம் மக்கள் அடைந்த சந்தோஷத்தைத் துக்கமாக மாற்றியது. மகவை ஈன்றெடுத்த இராணி இறந்துபோனாள்.

தாயில்லாப் பிள்ளையை எப்படி வளர்ப்பது என்பதுதான் அரசனின் கவலை. தகுந்த தாதியைத் தேடிக்கொண்டு வரும்படியாக அவர் தமது ஆட்களை பல இடங்களுக்கும் அனுப்பினார். அநேக பெண்கள், அரச சேவையில் அதிகமான ஊதியம் கிடைக்கும் என்று நம்பி, அரண்மனைத் தாதியாவதற்கு விரும்பினார்கள்.

கடைசியில், "மோதி" என்றொரு பெண் வந்தாள். அரசிளங் குமாரனைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணம் தான் அவள்

மனதில் இருந்தது. எனவே அவளையே தாதியாக நியமித்தார்.

மோதிக்கும் ஒரு குழந்தை இருந்தது. இரு குழந்தைகளுக்கும் ஏறக்குறைய ஒரே வயது தான். இருவரையும் மிகவும் அன்புடன் வளர்த்து வந்தாள் அத்தாதி. தன் மகனைப் பார்க்கிலும் அரசிளங் குமாரனைத் தான் அதிகமாய் நேசித்தாள் என்றுங்கூடச் சொல்லலாம். இதற்குக் காரணம் அவள் மனதில் உண்டான உள்ளான அனுதாபம்தான். "என் பிள்ளைக்குத் தாய் இருக்கிறாள். ஆனால் நம் அரச குமாரனுக்குத் தாய் இல்லையே" என்று அடிக்கடித் தனக்குள்ளே சொல்லிக் கொள்வாள்.

அரசனுக்கோ அநேக விரோதிகள் இருந்தார்கள். அவர்கள் அரச குமாரனைக் கொல்லும்படியாக சதி ஆலோசனை பண்ணினார்கள். ஆனால் அரண்மனைக்குள் இலகுவில் செல்ல முடியுமா?

ஒரு நாள் அவ்விரோதிகள் வாள்களை ஏந்திக் கொண்டு அரண்மனையை நோக்கி வந்தார்கள். வாசலிலிருந்த காவலாளர்கள் அவர்களை எதிர்த்துத் தாக்கினார்கள். என்ன

பிரயோஜனம்? ஒவ்வொருவராக மடிய வேண்டியதாயிற்று.

அரண்மனைக்கு உள்ளே ஒரு அறையில் தாதியின் மடியருகே இரு குழந்தைகளும் வெகு சந்தோஷமாக விளையாடிக் கொண் டிருந்தார்கள். அச்சமயத்தில் தான் ஒரு வேலையாள் ஓடி வந்து, "அம்மா! நான் என்ன சொல்லுவேன்! அரண்மனைக்குள் எதிரிகள் வந்து விட்டார்களே. நமது அரசிளங்குமாரனைக் கொல்லப் போகிறார்கள். என்ன செய்வது. ஐயோ! இது என்ன அநியாயம்," என்று அலறினான்.

ஒரு இமைப் பொழுது ஸ்தம்பித்து நின்றாள் தாதி. பிறகு அவள் மனம் ஒரு உறுதியான முடிவிற்கு வந்தது. தனது சொந்தப் பிள்ளையின் உடுப்பைக் கழற்றி அரச குமாரனுக்குப் போட்டாள். அவன் அணிந்திருந்த உடைகளைத் தன் மகனுக்கு உடுத்தினாள். துஷ்டர்கள் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. இராஜ உடையில் இருக்கும் தனது அருமை மகனை அரசகுமாரன் தூங்கும் கட்டிலிலே விட்டாள். அரச குமாரனைத் தூக்கிக் கொண்டு, பின் வாசல் வழியாய் ஒரே ஓட்டமாய் ஓடி விட்டாள்.

கதவு உடைந்தது. கொலைக்காரர் உள்ளே புகுந்தார்கள். அறையில் ஒருவரையும் காணேம். கட்டிலில் மாத்திரம் ஒரு குழந்தை இருந்தது. தலையிலிருந்த குல்லாவும் உடம்பில் அணிந்திருந்த உடைகளும் அப்பிள்ளை அரச



குமாரன் என்பதை எடுத்துக் காட்டின. அவர்களில் ஒரு முரடன் சிரித்துக் கொண்டே, "என்ன இருந்தாலும் தாதி தாதிதான். ஆபத்து வந்தவுடன் தன் மகனைத் தூக்கிக் கொண்டு ஒடிவிட்டாள். இவனைக் காப்பாற்றவோ ஆள் இல்லை" என்ருன். அதற்குள் அடுத்தவன், "தாதி நமது வேலையை இலகு வாக்கிவிட்டாள். நமக்கு வேண்டியது அரசகுமாரன் தான். அவன்

இங்கே இருக்கிறான். வேறு இடந்தேடி அலைய வேண்டியதில்லை" என்று பதிலளித் தான்.

கல்நெஞ்சம் படைத்த அப்பாதகர்கள் கட்டிலிலிருந்த பிள்ளையைக் கொன்றார்கள்.

ஆனால் சில மணி நேரங்களுக்குள்ளாக உண்மை வெளியாயிற்று. அரசகுமாரனைக் காப்பாற்றும்படியாக, மோதி தன் அருமைப் புதல்வனைப் பாதகர்களுக்குப் பலி கொடுத் தாள் எனறு ஜனங்கள் கேட்டபோது அவளை மிகவும் பாராட்டினார்கள். அரச பரம்பரையைக் காத்த அவளைப் புகழ்ந்தார் கள். அரசனுடைய மகிழ்ச்சியோ எல்லை மீறி யது. தாதிப் பெண்ணுக்கு வெகுமதியாக விலையுயர்ந்த ஆபரணங்களையும் வைரங்களை யும் அனுப்பினர். ஆனால் மோதியோ மிக வும் மரியாதையாக அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தாள். "கடமையைச் செய்த எனக்குக் கைக் கூலியா ?" என்றாள்.

அடுத்த நாள் அத்தாதி, "அரசிளங் குமாரனைக் காப்பாற்றிக் கொடுத்துவிட் டேன், என் கடமை தீர்ந்தது. இனி என் மகன் இருக்கும் இடத்திற்கு நான் செல்ல

வேண்டாமா" என்று சொல்லித் தனது உயிரை மாய்த்துக்கொண்டாள்.

"உயிரைக் கொடுத்தாகிலும், கடமையைச் செலுத்த வேண்டும்."

கேள்விகள்.

1. "மோதி" என்பவள் யார்? அவள் அரண்மனையில் எதற்காக நியமிக்கப்பட்டாள்?

2. அவள் அரசகுமாரனை எப்படிக் காப்பாற்றினுள்?

3. அவள் தன் குழந்தையை பலிகொடுத்தது சரியா? உன் அபிப்பிராயம் என்ன?

4. தாதியின் தியாகத்தைப் பற்றிச் சுருக்கமாய் எழுது.

---

5. விவேகமுள்ள மந்திரி

முன்னொரு காலத்தில் சக்கரவர்த்தி ஒருவர் நமது தேசத்தை ஆண்டுவந்தார். குதிரைகள் என்றால் அவருக்கு மிகவும் பிரியம். ஒரு நாள் குதிரை வியாபாரி அங்கு வந்தான். அவன் கொண்டுவந்த ஒரே குதிரையை சக்கரவர்த்தி பார்வையிட்டார். பரி பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருந்தது. அரபிக் குதிரை

யாகையால் ஐந்நூறு பொன் கொடுத்து அதை வாங்கிக் கொண்டார். அதைப்போல் இன்னொரு குதிரை இருந்தால் நன்றாய் இருக்



குமே என்று அவருக்குத் தோன்றிற்று. உடனே அவர் அந்த வியாபாரியைப் பார்த்து, " இதற்குச் சரி ஜோடியாக இன்

ஞெரு குதிரை இருந்தால் அதையும் வாங்கிக் கொள்கிறேன்" என்ருர்.

அதற்கு அக்குதிரை வியாபாரி, "அரசே, அப்படிப்பட்டக் குதிரை தற்சமயம் என்னிடமில்லே. ஆனல் அதன் விலேயை முன் பணமாக என் கையில் இப்பொழுதே கொடுத்துவிட்டால் நிச்சயம் குதிரையைக் கொண்டு வந்து, உம்மிடம் சேர்த்துவிடுவேன்" என்ருன்.

சக்கரவர்த்தியின் உத்தரவின்படியே, கஜாஞ அதிகாரி ஐந்நூறு பொன் காசுகளேக் குதிரை வியாபாரியிடம் கொடுத்தான். வியாபாரி, சந்தோஷமாய் அப்பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினுன்.

சில நாட்கள் சென்றன.

சாயங்கால நேரம். தென்றல் காற்று சிலுசிலு வென்று அடித்துக் கொண்டிருந்தது. பூக்களின் வாசனே மனதிற்கு ரம்மியமாயிருந்தது. யாதொரு கவலேயுமற்று அரசன் உல்லாசமாகத் திரிந்தார். குடிமக்கள் எல்லோரும் சந்தோஷமாய் இருந்தார்கள். இராஜ்யத்திற்கு விரோதிகள் கிடையாது.

அந்நாட்டில், உள்நாட்டுக் கலகம் என்பது யாரும் கேள்விப்படாத விஷயம். எனவே சக்கரவர்த்தி சந்தோஷமாய் இருந்தார் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

சர்க்கரவர்த்தியும், மந்திரியும், தடாகத்தின் கரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு வாக்கிலே, "நமது இராஜ்யத்தில் மிகுதியானவர்கள் விவேகிகளாக இருக்கிறார்கள்; முட்டாள்கள் என்று சொல்லக் கூடியவர்கள் மிகவும் சிலரே என்று நான் நினைக்கிறேன். அவர்களடங்கிய ஜாபிதா ஒன்றை தயாரித்தால் எத்தனை விசித்திரமாயிருக்கும். அமைச்சரே! உமக்கு இப்பொழுது இராஜ்யபாரம் அதிகமில்லை என்று எனக்குத் தெரியும். ஆகையால் அப்படிப்பட்ட ஜாபிதா ஒன்றை நீர் தயாரிக்க மாட்டீரோ" என்று கேட்டான். அமைச்சரும் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார்.

சக்கரவர்த்தி கொலு மண்டபத்தில் வீற்றிருந்தார். நாட்டில் அமைதி நிலை பெற்றிருந்தபடியால் அன்று அரசியல் காரியங்களை எல்லாம் வெகு சீக்கிரத்தில் முடித்துவிட்டார்கள். தாம் அமைச்சரை ஒரு ஜாபிதா

தயார் பண்ணச் சொன்னது அப்பொழுது தான் அவருடைய ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே அவரைப் பார்த்து, "முட்டாள்களின் ஜாபிதா தயாராகி விட்டதா?" என்று கேட்டார். மந்திரி, "ஆம் அரசே" என்றார்.

அரசனின் கட்டளைப்படி, இராணியும் மற்றப் பெண்களும் திரைக்குப் பின் வந்து உட்கார்ந்தார்கள். மந்திரி ஜாபிதாவைக் கையிலேந்தி சபை நடுவே நின்றார். யாவரும் தங்களுக்குக் கிடைக்கப் போகும் நகை விருந்தை நினைத்து மிகவும் ஆவலாய் காத்துக் கொண்டிருந்தார்கள்.

'நமது இராஜ்யத்திலே முதலாவது முட்டாள் நமது சக்கரவர்த்தி' என்று வாசித்தார் மந்திரி. அங்கு இருந்தவர்கள் தங்கள் காதுகளை நம்ப முடியவில்லை. "என்ன நமது சக்கரவர்த்தியா முட்டாள்!" என்று தங்கள் மனதுக்குள்ளே கேட்டுக் கொண்டார்கள். திரைக்கு அப்பால் உட்கார்ந்திருந்த பெண்களின் முகமோ நாணத்தால் சிவந்தன. இவர்களுக்கு நடுவே சர்க்கரவர்த்தி ஒருவர்தான் அமைதியோடும் நிம்மதியோடும் விளங்கினார்.

உட்கார்ந்திருந்தபடியே அது எப்படியாகும் என்றார். "சக்கரவர்த்தியே! ஆள், ஊர், பெயர், இவை ஒன்றும் தெரியாத யாரோ ஒரு வியாபாரியை நம்பி ஐந்நூறு பொன் காசுகளைக் கொடுப்பது பெரிய மடத்தனமல்லவா?" என்றார் மந்திரி.

ஆனால் சக்கரவர்த்தியோ இதற்குச் சரியான ஒரு பதில் வைத்திருந்தார். "அப்படியா சொல்லுகிறீர். இவ்வியாபாரி குதிரையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டால்—" என்று கேட்டார். அங்குள்ளவர்களின் மனதை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பாரம் நீங்கிற்று என்றே சொல்லவேண்டும். 'முதல் தடவையாக நம்முடைய மந்திரி, ராஜாவுக்குப் பதில் சொல்ல முடியாமற் போய்விட்டாரல்லவா' என்று சிலர் சந்தோஷப் பட்டார்கள்.

ஆனால் மந்திரியோ கண்ணியமான குரலில், "அப்படி அவன் குதிரையைக் கொண்டு வந்துவிட்டால், தங்களுடைய பெயரை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக அவனுடைய பெயரை எழுதிக் கொள்வேன்" என்றார்.

சபையோர் எல்லோரும், திரைக்கு அப்பால் இருந்த பெண்களும்கூட கொல்லென்று சிரித்தார்கள் !

கேள்விகள்.

1. வியாபாரியிடம் சக்கரவர்த்தி ஏன் அதிகமாக ஐந்நூறு பொன் காசுகளைக் கொடுத்தார் ?

2. எதற்காக சக்கரவர்த்தி ஒரு முட்டாள்களின் ஜாபிதாவைத் தயாரிக்கச் சொன்னார்?

3. சக்கரவர்த்தியின் பெயரை அந்த ஜாபிதாவில் முதலாவது எழுதினதற்கு அமைச்சர் சொன்ன காரணம் என்ன?

4. ஏன் எல்லோரும் "கொல்" லென்று சிரித்தார்கள்,

---

6. கீழ்ப்படிதலுள்ள மகன்

நல்நிசியில் நட்சத்திரங்கள் பளிங்குக் கற்களைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அரேபியா தேசத்தின் வனாந்தரப் பகுதியில், ஆபிரகாம் என்ற அரசர், தனது ஆட்களுடன் கூடாரங்களில் தங்கி இருந்தார்.

நித்திரையில் ஆழ்ந்திருந்த அவருக்குத் திடீரென்று ஏதோ விபரீதமான சத்தம் கேட்டது. அது எங்கிருந்து வந்ததென்று அவருக்குத் தெரியும். ஆகவே மிகவும் பயபக்தியுடன் அந்த அசரீரிக்குச் செவி கொடுத்

தார். "ஆபிரகாமே! ஆபிரகாமே! உனது மகனுகிய ஈசாக்கை, எனக்குப் பலியிடு" என்று அழுத்தம் திருத்தமான வார்த்தைகள் அவருடைய காதில் விழுந்தன.

ஈசாக்கு, ஆபிரகாமின் ஒரே மகன் ஆவான். வெகு நாட்களுக்குப் பிள்ளை இல்லாமல், வயோதிக காலத்தில் தவத்தின் பயனுகப் பிறந்த பாலகன் இவன். இவனைத் தான் கடவுள் தனக்குப் பலியிட வேண்டுமென்று கேட்டார். ஆபிரகாமின் மனம் எப்படியிருந்திருக்கும்? அருமைப் புதல்வனை எங்ஙனம் வெட்டிப் பலியிடுவது? இது முடியுமா? ஆனுல் இப்படிப்பட்ட கேள்விகள் ஒன்றும் அவர் மனதைத் துன்புறுத்தியதாகத் தோன்றவில்லை. 'இது கடவுளின் ஆக்கினை; இதை நிறைவேற்றுவது எனது கடமை' என்பதை ஆபிரகாம் உணர்ந்தார். ஆகவே கடவுள் கேட்ட காரியத்தைச் செய்துவிடுவது என்று தீர்மானித்தார்.

விடிவதற்கு முன்பே எழுந்து, கூடாரத்தின் பின்புறமாகச் சென்று, அங்குக் கட்டியிருந்தக் கழுதையை அவிழ்த்து வாயிலண்டைக் கொண்டுவந்து நிறுத்தினுர். அதன் முதுகின்மேல் சேணத்தை வைத்து அதினின்

றும் தொங்கிய பையில் ஒரு கூறிய வாளை வைத்தார். கடைசியாகத் தன் மகன் ஈசாக்கை எழுப்புவதற்கு ஆபிரகாம் அவன் படுக்கை அருகில் போனார். முன்னமே நித்திரை தெளிந்து விழித்திருந்த மகன், தகப்பனார் பக்கத்தில் வந்தவுடன், "அப்பா என்னை விட்டுவிட்டு எங்கேயோ போகலாம் என்று பார்க்கிறீர்கள்? நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். நீங்கள் கழுதையைப் பிடித்துக் கட்டினதும், சேணத்தை மாட்டினதும் எனக்குத் தெரியும். உம்—எங்கே போகப் புறப்படுகிறீர்கள், சொல்லுங்கள். கட்டாயம் நானும் வருகிறேன்." என்று இனிய குரலுடன் கூறினான்.

ஆபிரகாம், அச்சமயத்திற் கென்று புன்சிரிப்பை வருவித்துக் கொண்டு, "நான் உனக்குச் சொல்லாமல் போய்விடமாட்டேன். வா. என் கூடவே வா. நீதான் மிகவும் அவசியம்" என்று கூறினார்.

பையன் தாவிக் குதித்து கழுதையின் மேல் உட்கார்ந்தான். ஆபிரகாம் வழி நடத்தினார். இம்மிருகம் கரடு முரடான பாதைகளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது விரைவில் நடந்து சென்றது. தென்

றல் காற்று சிலு சிலுவென்று அடித்துக் கொண்டிருந்தது. விடியுமுன் எழுந்த ஒன் றிரண்டு பறவைகளின் இனிய கானம் செவிக்கு விருந்தாக யிருந்தது.

அசைந்து கொண்டு போகும் வாகனத்தி னின்றும் விழாமல் வெகுகவலையுடன் பையன் தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். ஆபிர காமின் மனம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட் டிருந்த படியால், அவர் அதிகமாகப் பேச வில்லை.

ஆபிரகாம் ஒரு தெய்வ பக்தியுள்ள மனி தர். கடவுளுடன் பெருந் தொடர்பு கொண் டிருந்தார். என்று கூடச் சொல்லலாம். அவ ருடைய விருப்பத்தை அறிந்து அதைச் சரி வர நிறைவேற்றுவதே தமது பணி என்றிருந் தார். அன்று அவருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின் உட்கருத்தை அவர் முழுவதும் அறிந்து கொள்ள முடியாமற் போனாலும், தாம் செய்ய வேண்டிய காரியம் என்ன என் பது மாத்திரம் அவருக்குத் தெளிவாய்த் தெரிந்திருந்தது.

மலையின் அடிவாரத்தில், தனது வேலை யாட்களைத் தங்கி இருக்கும்படிச் சொல்லி

விட்டு, ஆபிரகாமும், ஈசாக்கும் அதன் உச்சியை நோக்கி நடந்தார்கள். பிளந்த விறகுகளடங்கிய சுமையை ஈசாக்கு சுமந்து வந்தான். சாதாரணமாய் தகன பலிக்கு விறகு வேண்டும். நெருப்பு வேண்டும். பலியிடப்படவேண்டிய மிருகம் வேண்டும். பையன் தலையில் விறகு இருந்தது. தகப்பனுர் நெருப்பு கொண்டு வந்தார். ஆகவே ஈசாக்கு தன் தந்தையை நோக்கி "அப்பா தகன பலிக்கு ஆட்டைக் காணேமே" என்ருன். ஆபிரகாமோ, "அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆண்டவன் பார்த்துக் கொள்வார்" என்று பதிலளித்தார். வார்த்தைகள் தடுமாறிக் கொண்டுதான் வந்தன. ஆனல் அச்சிறுவனுக்கு தகப்பன் மனதில் தோன்றி மறைந்த ஆயிரம் எண்ணங்களையும் அறியக்கூடுமோ?

உச்சியை அடைந்தவுடன், கொண்டு வந்த விறகுகளை ஆபிரகாம் ஒழுங்காக அடுக்கினுர். பின்பு தன் மகனின் கைகளையும் கால்களையும் கட்டி அதன் மேல் கிடத்தினுர். பையன் அழுதானு? அழவில்லை. பின்பு ஆபிரகாம் வாளை உறுவி அவனை வெட்டுவதற்கு ஓங்கினுர்.

என்ன ஆச்சரியம்! "ஆபிரகாமே!, ஆபிரகாமே!! பிள்ளையின் மேல் உன் கையைப் போடாதே. அவனை ஒன்றும் செய்யாதே. நீ அவனை உத்தம புத்திரன் என்றும் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால், நீ எனக்குக் கீழ்ப்படி கிறவன் என்று இப்போது அறிந்திருக் கிறேன்" என்ற உரத்த சத்தம் வானத்தி லிருந்து கேட்டது.

ஓங்கின ஆபிரகாமின் கை அப்படியே நின்றது. இவ்வார்த்தைகளைக் கேட்ட அவர் மனம் பூரித்தது என்று சொல்லவும் வேண் டுமோ? கடவுள் தன்னைச் சோதித்தார் என் றும், அச்சோதனையில் தான் தவறவில்லை என்றும் அவர் அறிந்து சந்தோஷப்பட் டார்.

இதற்கிடையில் சல சல வென்று ஒரு சத்தம் கேட்கவே, பின்னாகத் திரும்பிப் பார்த்தார். புதரில் தன் கொம்புகளைச் சிக்க வைத்துக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடா வைக் கண்டார். அவர் மனம் இக்காட்சி யின் அர்த்தத்தை வெகு இலகுவாக விளக்

கிக் கொண்டது. உடனே தன் குமாரனுக்



குப் பதிலாக அப்பிராணியைக் கொன்று தகன பலியிட்டார்.

மறுபடியும் கடவுள் அவரோடு பேசினார். "நான் உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும், பெருகச் செய்யவே இதைச் செய்தேன்" என்றார்.

ஆபிரகாமும், ஈசாக்கும், கைகூப்பி, வணக்கமாக நின்று கடவுளைத் தோத்தரித்து வீடு திரும்பினார்கள்.

கடவுளின் ஆசீர்வாதம் பலிக்காமல் போகவில்லை. ஆபிரகாமின் சந்ததியார் ஒரு பெரிய ஜாதியாராகிக் கடைசியில் பாலஸ்தீன தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டார்.

கேள்விகள்.

1. நித்திரையில் ஆழ்ந்திருந்த ஆபிரகாம் கேட்ட சப்தம் என்ன?

2. "பிள்ளைப் பாசத்தைவிட கடவுள் பக்தி ஆபிரகாமுக்கு அதிகமாய் இருந்தது" எப்படி?

3. தகனபலி என்றால் என்ன? விளக்குக.

4. ஆபிரகாம் வாளை உருவினவுடன் என்ன நடந்தது?

5. தகனபலி எப்படி நிறைவேற்றப்பட்டது?

6. கடவுள் ஆபிரகாமை எப்படி ஆசீர்வதித்தார்?